மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 24/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : பெரியசாமி (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

04.11.2025

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

1. நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க கொஞ்சம் தெரியும். எனது எதிர்வழக்குரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் என்ன உள்ளது என்பது எனக்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் தாவா சொத்தை நீதிமன்றத்தில் இருந்து பார்க்க வந்தார்கள் அவர்களை வாதி தரப்பினர் விரட்டிவிட்டார்கள் என்று சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு இருக்கையில் நீதிமன்ற ஆணையர் கொடுத்த அறிக்கை மற்றும் வரைபடம் பொய்யா என்றால் பொய்தான். எனது ஊரில் பட்டா எண்.122 சர்வே எண்.179/2 காவேரி நாயக்கர் மகன் பால்சாமி பெயரில் உள்ளது என்றால் இல்லை. சர்வே எண்.179/2 ல் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் எனக்கு பாத்தியம் இல்லை. அதனை வாதிகள் அனுபவிப்பதில் எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.179/2 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நான் ஆட்டுக் கொட்டகை போட அனுமதி கேட்டேன் என்றும் அதற்கு அவர் மறுத்ததால் இந்த வழக்கை கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் ஜெயராம் மனைவி வாதி நாகலட்சுமி கிடையாது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஜெயராம் மனைவி வாதி நாகலட்சுமி என்று நிரூபித்துவிட்டால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஜெயராம் மனைவிதான் நாகலட்சுமி . அவ்வாறு எனது வாக்குமூலத்தில் ஜெயராம் மனைவி நாகலட்சுமி இல்லை என்று சொல்லி இருந்தால் அது தவறுதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.181/3 ஆகும். அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 24 செண்ட் ஆகும். கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியாது. மேற்கே

என்ன உள்ளது என்றால் தங்கராஜ் வீடு உள்ளது. மேற்கே தங்கராஜ் வீடு மட்டும்தான் உள்ளதா என்றால் தங்கராஜ் வீடு மட்டும்தான் உள்ளது. 1976 ம் வருடத்திய நாகலட்சுமி தாக்கல் செய்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் 4 வது பாராவில் 1976 ம் வருடத்திய பத்திரத்தை குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் 5 வது பாராவில் நீதிமன்ற ஆணையரை தடுத்துவிட்டார் என்று சொல்லி உள்ள நிலையில் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் அவ்வாறு சொல்லி உள்ளாரா என்றால் முதலில் தடுத்தார்கள், அதன்பின்னர் பார்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனது வாக்குமூலத்தில் முதலில் தடுத்தார்கள் என்றும் பிறகு பார்த்தார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கஞ்சநாயக்கர் , மாச்சா நாயக்கர், சிவத்தையா நாயக்கர் ஆகியோருக்கு பாத்தியம் இல்லை என்று சொல்லி உள்ள நிலையில் அது எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் பத்திர அலுவலகத்தில் நகல் போட்டு பார்த்தோம். அது எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

3. எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பள்ளிகூடத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பள்ளிகூடத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எத்தனை வகுப்புகள் வரை பள்ளிகூடத்தில் உள்ளது என்றால் 5 ம் வகுப்பு வரை உள்ளது. அந்த பள்ளிகூடம் நான் பிறப்பதற்கு முன்பே உள்ளது. ஓட்டுவாட்ட பள்ளிகூடம் பள்ளிகூடம் பாத்தியப்பட்ட சர்வே எண்ணில் மையப்பகுதியில் இருந்தது என்றால் சரிதான். அதை சுற்றியுள்ள இடங்கள் காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். பழைய ஓட்டுவாட்ட பள்ளிகூடத்திற்கு தெற்கு பகுதியில் இருக்கும் காலியிடத்தில்தான் சத்துணவு கூடம், அங்கன் வாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சத்துணவு கூடம், அங்கன் வாடி கட்டிடம் கட்டுவதற்கு முன்பு அந்த இடம் காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். 1976 ம் வருடத்தில் வாதியின் கணவர் ஜெயராம் வாங்கிய பத்திரத்தில் வடக்கு மாலில் பள்ளிகூடம், காலியிடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த காலியிடம் பள்ளிகூடத்தோடு சேர்ந்த காலியிடம் என்று சொன்னால் சரியல்ல. நான் முன்விரோதத்தினால் இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றாலும் ஆட்டு கொட்டகை போட அனுமதி தராததால் இந்த வழக்கை நடத்தி வருகிறேன்என்றாலும்

இந்த வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து உள்ள இடத்தில் வீடு உள்ளது என்றால் வீடு உள்ளது, வழக்கு போட்டவுடன் கட்டியுள்ளார்கள். வழக்கு நடக்கிறது வீடு கட்டகூடாது என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்தற்கான அத்தாட்சி இல்லை. பள்ளிகூடம் ரோட்டிற்கு வடக்கே 6 முதல் 12 ம் வகுப்பு வரை கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். வாதி குடும்பத்தில் இருந்து இனாமாக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தை வாதி இனாமாக கொடுத்துள்ளார்கள் என்றாலும் அவ்வாறு இனாமாக கொடுக்கும் மனநிலையில் உள்ளவர்கள் தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றாலும் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

தாவா சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எத்தனை சதுர மீட்டர் என்று எனக்கு தெரியுமா என்றால் மொத்தம் 24 செண்ட். தாவா சொத்து சர்வே எண்.181/3 அதில் 954 ச.மீ சர்க்கார்புறம்போக்கு காலியிடம் என்று அரசு ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே சர்வே எண்.181/2 ல் பஞ்சாயத்திற்குட்பட்ட பள்ளி உள்ளது என்றால் சரிதான். அதை ஒட்டி சர்க்கார் புறம்போக்கு காலியிடம் உள்ளது என்றால் சரிதான். வடக்கே பள்ளி, அதை ஒட்டி சர்க்கார் புறம்போக்கு பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் தண்ணீர் தொட்டி, ரேசன் கடை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கோ, வாதிகளுக்கோ பாத்தியம் கிடையாது என்றாலும் சர்க்காருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.